# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 3 ஹிஜ்ரி 1428 ரபியுல் ஆஹிர் ஏப்ரல் 2007 இலவசம்




# நாகூர் தர்கா மரபுடைமை வளாக சீரமைப்புப் பணி நிதி திரட்டும் விருந்தில் அதிபர் எஸ்.ஆர். நாதன்

# நாகூர் தர்கா மரபுடைமை வளாக சீரமைப்புப் பணிக்கு நிதி ஆதரவு

சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்களின் பாரம்பரிய சிறப்பைப் பளிச்சிடும் சின்னமான தெலுக் ஆயர் ஸ்திரீட் நாகூர் தர்காவை புதுப்பிக்கும் நற்பணி விரைவில் தொடங்கவிருக்கிறது.

தர்கா சீரமைப்புப் பணிக்கு நிதி திரட்ட 3.12.2006 அன்று இரவு சாங்கி எக்ஸ்போ அரங்கில் நடைபெற்ற அறப்பணி விருந்து நிகழ்ச்சி ஓர் இனிய வரலாற்றுப் பதிவு. மாண்புமிகு அதிபர் எஸ்.ஆர். நாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில், சுற்றுப்புற, நீர்வள அமைச்சரும், இஸ்லாமிய விவகார அமைச்சருமான டாக்டர் யாகூப் இப்ராஹிம், மூத்த வெளியுறவுத் துணை அமைச்சர் ஹாஜி ஜைனல் ஆபிதீன் ரஷீத், முயிஸ் தலைவர் ஹாஜி அலமி மூசா முதலானோர் பங்கேற்றனர்.

நாகூரில் அடக்கமாகி இருக்கும் இறைநேசர் ஷாஹுல் ஹமீது நாயகரின் நினைவாக தெலுக் ஆயர் ஸ்திரீட்டில் இந்திய முஸ்லிம் வணிக சமூகம் நாகூர் தர்காவைக் கட்டிய வரலாற்றை நாம் அறிவோம். 1827 அக்டோபர் முதல் தேதி வழங்கப்பட்ட குத்தகையின் கீழ் தர்கா உருவாக்கப்பட்டது. அன்றைய தமிழ் முஸ்லிம் பிரமுகர் காதர் பிள்ளை, பிரிட்டிஷ் கிழக்கு இந்திய





கம்பெனியிடம் இருந்து குத்தகையைப் பெற்றார். அதன்படி தெலுக் ஆயர் ஸ்திரீட்டில் வழங்கப்பட்ட இடத்தில் 1828-ஆம் ஆண்டுக்கும் 1830-க்கும் இடையில் தர்கா கட்டி முடிக்கப்பட்டது.

## மரபுடைமை வளாகம்

தர்கா 1974-ஆம் ஆண்டு நவம்பர் 29-ஆம் தேதி தேசிய நினைவுச் சின்னமாக அறிவிக்கப் பட்டது. அதன் நிர்வாகப் பொறுப்புகளை நீதி மன்ற ஆணையின்படி 2000 அக்டோபர் பதினெட்டாம் தேதி முயிஸ் ஏற்றுக் கொண்டது. இந்திய முஸ்லிம்களின் மரபுடைமை நிலையமாக தர்கா மேம்படுத்தப்படும் என்று அப்போது அறிவிக்கப்பட்டது.

நாகூர் தர்காவை 1.8 மில்லியன் (18 லட்சம்) வெள்ளி செலவில் மரபுடைமை வளாகமாக மேம்படுத்தும் திட்ட விவரங்களை பென்கூலன் பள்ளிவாசலில் 20.5.2005 வெள்ளிக்கிழமை தொழுகைக்கு முன் நடைபெற்ற நிகழ்ச்சியில், முயிஸ் தலைவர் ஹாஜி முஹம்மது அலமி மூசா முதல் முறையாக வெளியிட்டார். அந்தப் பணிக்கு நிதி திரட்டுவதற்காக தொழிலதிபர் ஹாஜி அப்துல் ஜலீல் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு முயிஸ் மூன்று லட்ச



வெள்ளியை அப்போது வழங்கியது.

இந்திய முஸ்லிம்கள் பாரம்பரியச் சிறப்புடையவர்கள். உழைப்பும் புரிந்துணர்வும் மிக்கவர்கள். அவர்களின் பலதுறைத் திறன் சமூகத்திற்கு சீரும் சிறப்பும் சேர்க்கக் கூடியது. அவர்களின் உழைப்புத் திறனுக்கு ஒரு சின்னம் இருப்பது அவசியம். அதற்கு அனைவரும் ஆதரவு நல்க வேண்டும் என்று அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் அப்போது குறிப்பிட்டார்.

இந்திய முஸ்லிம்களின் வரலாற்றையும், கலாசாரத்தையும் சித்திரிக்கும் காட்சியகம், ஆய்வு மையம், நூலகம், நிகழ்ச்சி அரங்கு முதலானவை மரபுடைமை நிலையத்தில் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## நிதி திரட்டும் விருந்து

அறநிதி விருந்துக்கு பத்து இருக்கைகளைக் கொண்ட ஒரு மேசைக்குக் குறைந்த பட்ச கட்டணம் $1,000. அவற்றுடன் குறைந்த எண்ணிக்கையிலான கூடுதல் நன்கொடைக் குரிய மேசைகளுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன.

நாகூர் தர்கா மரபுடைமை வளாக நிதி திரட்டும் விருந்தில் இரண்டு லட்சம் வெள்ளி நிதி சேர்ந்தது. முயிஸ் தலைவர் ஹாஜி அலமி மூசா அதிகாரபூர்வமாக அதை அறிவித்தார்.

அதையடுத்து மினி என்வைரன்மெண்ட் சர்வீசஸ் நிறுவனம் தனிப்பட்ட முறையில் ஒரு லட்சம் வெள்ளியை வழங்கி நிதியை மூன்று லட்சமாக உயர்த்தியது. அந்தத் தொகைக்கான காசோலையை நிதி திரட்டும் குழுவின் தலைவருமான ஹாஜி ஜலீல் சிறப்பு விருந்தினர் அதிபர் எஸ்.ஆர். நாதனிடம் வழங்கினார். நிதி திரட்டும் திட்டத்தை முயிஸ் 2005-ல் அறிவித்த போதே 18 ஆயிரம் வெள்ளியை ஹாஜி ஜலீல் அடையாள நன்கொடையாக வழங்கிச் சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

மாடர்ன் மாண்டிசோரி கல்வி நிலைய இயக்குநர் திரு. டி. சந்துரு 10,000 வெள்ளி நன்கொடை வழங்கினார். 'தமிழ் நாட்டிலுள்ள நாகூர் தர்கா அனைத்து மதத்தினரும் சென்று பயனடையும் திருத்தலமாக விளங்குகிறது. அத்தகைய சிறந்த திருத்தலத்தின் நினைவிடமாக சிங்கப்பூரில் கட்டப் பட்டிருக்கும் நாகூர் தர்கா மிகப் பழைய கட்டடமாகும். பழமையான அந்தக் கட்டடத்தைக் காப்பதற்கு என்னால் ஆன பங்கையாற்ற வாய்ப்பு கிடைத்திருப்பதில் எனக்குப் பெருமகிழ்ச்சி. சமய நல் லிணக்கத்திற்கு ஊக்கம் தரும் வகையில் நாகூர் தர்கா மரபுடைமை வளாக முயற்சிக்கு $10,000 வழங்கினேன். மற்றவர்களும் இம்முயற்சிக்கு உதவ முன்வரவேண்டும்' என்று அவர் கூறினார்.

நாகூர் தர்காவை மரபுடைமைச் சின்னமாக்கி, அதைப் பராமரிக்க முயற்சிகள் எடுத்த அனைத்துத் தரப்பினருக்கும் ஹாஜி அப்துல் ஜலீல் தமது உரையில் நன்றி பாராட்டினார். நாகூர் தர்காவின் இலக்குகள் மத நோக்கங்களைத் தாண்டியது. சிங்கப்பூரில் சமயங்களுக்கு இடையிலான நல் லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் வளர்ப்பதில் இந்த தர்கா முக்கிய பங்காற்றியுள்ளது வரலாற்றில் பதிவு





செய்யப்பட வேண்டிய ஒன்று. எனவே, இந்த வரலாற்றுச் சின்னத்தின் பின்னணியில் உள்ள நோக்கத்தையும் நல்லுணர்வையும் பேணிப் போற்றுவதில் நாம் அனைவரும் முக்கிய பங்கை ஆற்றுகிறோம் என்றும் அவர் கூறினார்.

நாகூர் தர்கா சிங்கப்பூர் குடியரசின் சமயப் புரிந்துணர்வுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து வருகிறது. மரபுடைமை வளாகம் முழுமையாக நிர்மாணிக்கப்பட்ட பிறகு நமது முன்னோர்கள் நாட்டின் உருவாக்கத்திலும் கட்டமைப்பிலும் எத்தகைய பங்கை ஆற்றியுள்ளனர் என்பதை இளந் தலைமுறையினர் நன்கு அறிந்து கொள்வர் என்பது உறுதி. செம்மையாகவும் சீராகவும் தொடங்கி வைக்கப்பட்டுள்ள பணி வெற்றிகரமாக நிறைவு பெறும் என்று நிதி திரட்டும் குழுவின் செயலாளர் ஹாஜி நஸீர் கனி தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

## சிறப்பு மலர்

அறநிதி திரட்டு விருந்து நிகழ்ச்சியில் கண்கவரும் வண்ண ஓவியமாக வரையப்பட்ட நாகூர் தர்கா மரபுடைமை வளாகப் படத்தை அதிபர் எஸ்.ஆர். நாதன் அவர்களுக்கு ஏற்பாட்டுக் குழுவினர் வழங்கினர். ஓவியர் மனோ அந்தச் சித்திரத்தை வரைந்திருந்தார்.

நாகூர் தர்கா மரபுடைமை வளாக மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. நாகூர் தர்காவைப் பற்றியும், ஷாஹுல் ஹமீது நாயகர் பற்றியும் அரிய தகவல்களும் சிறப்புக் கட்டுரைகளும் மலரில் இடம் பெற்றுள்ளன. அமைச்சர்கள், நினைவுச் சின்ன பாதுகாப்புக் கழகத் தலைவர், நிதி திரட்டும் குழுவின் தலைவர் ஹாஜி அப்துல் ஜலீல், செயலாளர் ஹாஜி நஸீர் கனி ஆகியோரின் வாழ்த்துச் செய்திகள், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட கட்டுரைகள், கவிதைகளைத் தாங்கிய அந்தச் சிறப்பு மலர் அறநிதி விருந்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்பளிப்பாக வழங்கப் பட்டது. அறநிதி திரட்டும் விருந்துக் குழுவின் சார்பில் எழுத்தாளர் இலியாஸ் அந்த மலரைத் தொகுத்துள்ளார்.

தர்காவின் மறுமேம்பாட்டுப் பணி விரைவில் தொடங்கி இவ்வாண்டு டிசம்பர் மாதம் முடிவடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

தனிப்பட்ட முறையில், நாகூர் தர்கா பாதுகாப்பு நினைவு நிதிக்குத் தொகை வழங்க விரும்புவோர், "Preservation of Monuments Fund-Nagore Dargah" எனக் குறிப்பிட்டு நன்கொடை வழங்கலாம். அதற்கு, தேசிய நினைவுச் சின்னங்களுக்கான நன்கொடை வரிச் சலுகைத் திட்டத்தின் கீழ் இரட்டை வரிவிலக்கு கிடைக்கும்.





# உலகமயக் கண்ணோட்டத்துடன் இந்திய முஸ்லிம் சமூகம் வளம் பெற வேண்டும்

உலகமயக் கண்ணோட்டமே முன்னேற்றத்துக்கு உறுதுணை. நகரம், நாடு என்ற எல்லை, வரையறைகளுக்கு அப்பால் அனைத்துலக அளவில் செயல்பட வேண்டிய காலம் இது. அதன் மூலமே எந்த சமூகமும் வளம் பெற முடியும்.

முஸ்லிம் விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் இந்தக் கண்ணோட்டத்தை இந்திய முஸ்லிம் சமூகத்துடன் பகிர்ந்து கொண்டு, ஆலோசனைகளையும் வழங்கி உள்ளார். சுற்றுப்புற, நீர்வள அமைச்சருமான அவர், ராபிள்ஸ் டவுன் கிளப்பில் நடைபெற்ற (19.11.2006) இந்திய முஸ்லிம் சமூக ஆய்வரங்கில் உரையாற்றினார்.

இந்திய முஸ்லிம்கள் கடல் கடந்து வர்த்தகம் புரிந்து வரலாறு படைத்தவர்கள். அவர்களுக்கு சிறப்பிடம் என்றும் உண்டு. அது தொடர்ந்து நிலைபெற அவர்கள் பாடுபட வேண்டும். உலகப் பொருளியல், தொழில்துறை மாற்றங்களை இந்திய முஸ்லிம் சமூகம் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். உலகின் பல்வேறு புதிய வாய்ப்புகளை உத்வேகத்துடன் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

புதிய வாய்ப்புகளைப் புரிந்து செயல்படுவது பொருளீட்டுவதற்காக மட்டுமே என்று எண்ணிவிடக் கூடாது. அதன் மூலம் உலகமயப் போக்குகளை புரிந்துகொள்ள





முடியும். அதே வேளையில், புதிய அனுபவங்களையும் அவற்றின் பரிமாணங் களையும் சமூகத்திற்கு நாம் வழங்கி வளம் சேர்க்கலாம். நம் சமூகம் மென்மேலும் திறன்களைப் பெற அவை உறுதுணையாக அமையும் என்று டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் கூறினார்.

சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்திற்கு இந்திய முஸ்லிம்கள் காலந்தோறும் பெரும்பங்காற்றி வந்துள்ளனர். அது சிங்கப்பூர் வரலாற்றின் அங்கம். இன்றும் பல புரவலர்கள் உதவி வழங்கி வருகின்றனர். நாகூர் தர்கா மரபுடைமை வளாகம் உள்ளிட்ட பல்வேறு நிதி திரட்டும் முயற்சிகளில் தொழிலதிபர் எஸ்.எம். ஜலீல் பங்கேற்றுள்ளார். மெண்டாக்கியின் கல்விப் பணியில் பங்காற்றி வந்துள்ளவர்களை மறந்துவிட முடியுமா? தொண்டூழியரும் வர்த்தகருமான ஜனாப் அஜீஸ், மாணவர் களுக்கான கல்வி உபகாரச் சம்பளத்தைத் தொடங்குவதற்கு உறுதுணை புரிந்து வந்தார். கடந்த காலத்தை நாம் மறந்துவிடக் கூடாது. கால மாற்றங்களையும் புறக்கணித்துவிடக் கூடாது. உலகமயக் கண்ணோட்டத்துடன் செயல்பட்டு பல துறைகளிலும் நாம் முன்னேற வேண்டும். அந்த அனுபவங்களை சமூகத்துடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆலோசனை வழங்கினார் அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம்.

# MUIS PHOTO NEWS முயிஸ் படச் செய்திகள்




Visit to Harmony Centre on 12th Oct 2006 by Dr Dato' Abdullah Md Zin, Minister at PMO, Malaysia



Site visit to New Madrasah Al-Maarif on 29th Dec 2006



Commencement of Youth aLIVE Primer Series on Islamic Civilisation @ Assyakirin Mosque on 23rd Dec 2006




Launch of Parents' Kit for Teens a.L.I.V.E Programme @ Istighfar Mosque on 12th Nov 2006




Arrival of guests for the Nagore Dargah Renovation Fund Raising Dinner on 3rd Dec 2006

# சிங்கப்பூரில் ஹஜ் பயணச் சேவை விரிவாக்கம்

சிங்கப்பூர், ஹஜ் பயணச் சேவை மையமாக விரிவடைந்து வருகிறது. கடந்த டிசம்பர் மாதம் 2595 பேர் இங்கிருந்து சவூதி அரேபியாவுக்கு புனித ஹஜ் பயணம் மேற்கொண்டனர். ஆண்டுக்கு ஆண்டு ஹஜ் யாத்திரிகர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 2005-ஆம் ஆண்டில் 1996 பேர் குடியரசிலிருந்து ஹஜ் பயணம் செய்தனர், வரும் ஆண்டுகளில் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சேவை வசதிகளின் விரிவாக்கமே அதற்குக் காரணம்.

சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றமான முயிஸ் 1968-ல் தொடங்கியது. அதன் பிரதிபலிப்பாக ஹஜ் பயணச் சேவை வளர்ச்சியும் அமைந்துள்ளதை அறியலாம். 1975-ஆம் ஆண்டில் இருந்து ஹஜ் சேவை நிர்வாகத்தை முயிஸ் வெகுவாக மேம்படுத்தத் தொடங்கி சவூதி அரேபிய ஹஜ் நிர்வாகத் துறையின் அங்கீகாரத்தைப் பெற்றது.

ஓரளவு குறைந்த செலவுகளைக் கொண்ட ‘பேக் பேக்கர்ஸ்’ (Backpackers) எனும் புதிய ஹஜ் பயணச் சேவை முறையும் அறிமுகப் படுத்தப்பட்டது. மேலும், ஹஜ் பயணத்தை ஏற்று நடத்த 24 பயண முகவர்களுக்கு முயிஸ் அனுமதி வழங்கியதும் குறிப்பிடத்தக்கது. அதனால் டிசம்பர் மூன்றாம் தேதி முதல் சிங்கப்பூர் ஹஜ் பயணிகள் கட்டம் கட்டமாக சவூதி அரேபியாவுக்குப் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் ஹஜ் கடமையின் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்த விளக்கவுரை நிகழ்ச்சிகளை முஸ்லிம் பயண முகவர் சங்கம் நடத்தியது. முன்பு அத்தகைய விளக்க நிகழ்ச்சிகளை முயிஸ் மட்டுமே நடத்தி வந்தது.

முதல் முறையாக கடந்த ஆண்டில் 190 ஆஸ்திரேலிய ஹஜ் யாத்திரிகர்களுக்கு மருத்துவ சேவையை முயிஸ் வழங்கியது. அந்த சேவைத் தரம் பற்றி ஆஸ்திரேலிய ஹாஜிகள் மகிழ்ச்சியும் மனநிறைவும் தெரிவித்தனர். வரும் ஆண்டுகளில் மேலும் அதிகமான ஆஸ்திரேலியப் பயணிகளுக்கு மருத்துவ சேவையை விரிவுபடுத்த முயிஸ் திட்டமிட்டு உள்ளது. சிங்கப்பூர் ஹஜ் நிர்வாக முறையை மற்ற முஸ்லிம் சமூக அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளவும் முயிஸ் கருதுகிறது.

முயிஸ் சிங்கப்பூரின் 30 ஆண்டு ஹஜ் சேவை குறித்த நூல் ஒன்றையும் (Our journey - 30 Years of Haj Services in Singapore) வெளியிட்டு இருக்கிறது. சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்திற்கு ஹஜ் பயணச் சேவை கடந்த முப்பது ஆண்டுகளில் கட்டம் கட்டமாக மேம்படுத்தப் பட்டு வந்துள்ளதை எடுத்துரைக்கும் நூல் அது.

கடந்த காலத்தில் இங்கிருந்து ஹஜ் பயணம் செய்த பலரின் அனுபவங்களும், பல சம்பவங்களும் நூலில் இடம் பெற்றுள்ளன.

தென் கிழக்காசிய மக்களுக்கு ஹஜ் பயணத் துறை மையமாக சிங்கப்பூர் விளங்கி வந்து உள்ளது. 1900-ஆம் ஆண்டில் இங்கிருந்து 14 ஆயிரம் பேர் ஹஜ் பயணத்தைத் தொடங்கினர். ஹாஜி லேன் அந்த சேவையின் தளமாகவும் களமாகவும் திகழ்ந்தது.

சிங்கப்பூரில் இருந்து புனித ஹஜ் பயணம் மேற்கொண்டவர்களில் ஆக மூத்தவர் 101 வயது பெண்மணி. மீனவரின் மனைவியான அவர், 1963-ஆம் ஆண்டில் ஹஜ் கடமையை நிறைவேற்றினார்.

ஆய்வு நூலாகவும் சுவையான தகவல் பதிவாகவும் அமைந்துள்ள இதனை எழுதியவர் பிரிட்டனைச் சேர்ந்த ஜமால் அந்தோனி கிரீன். இஸ்லாத்தைத் தழுவிய கிரீன் தற்போது நியூசிலாந்தில் வாழ்ந்து வருகிறார்.

# ரிஸாலா - முன்னேற்றப் பயணம்

பத்து அம்ச மேம்பாட்டு திட்டத்தைச் செயல்படுத்த சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சமூகம் பற்றுறுதி.

சிங்கப்பூர் இஸ்லாமிய சமய மன்றமான முயிஸ் உன்னத சிங்கப்பூர் முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்கும் பத்து அம்சத் திட்டத்தை வெளியிட்டு செயல்படுத்தி வருகிறது. ஆக்ககரமான, முற்போக்கான சமுதாய நலத்திட்டம் அது.

ஒட்டு மொத்த சிங்கப்பூர் முஸ்லிம்களின் சமய, சமூக வாழ்க்கை முறையை மேம்படுத்தி, அவர்களின் அடையாளத்தை நிலைபெறச் செய்வது பத்து அம்சத் திட்டத்தின் அடிப்படை நோக்கம். அந்த இலக்கை அடையும் முயற்சியில் சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் அமைப்புகள் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றன.

இந்திய முஸ்லிம் சமூக வழிகாட்டிக் குழுவின்ஆய்வரங்கில் *(19.11.2006)* இதுவரை செயல்படுத்தப்பட்டுள்ள திட்ட விவரங்கள் வெளியிடப்பட்டன. சிங்கப்பூர் இந்திய முஸ்லிம் சங்கங்களும், அமைப்புகளும் பங்கேற்ற அந்த நிகழ்ச்சியில் சுற்றுப்புற, நீர்வள, இஸ்லாமிய விவகார அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மூன்று அம்சங்கள் நடப்புக்கு வந்துள்ளன. எஞ்சிய ஏழு திட்டங்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றப்படும். அதற்குரிய இலக்குகள் நிர்ணயிக்கப் பட்டுவிட்டதாக இந்திய முஸ்லிம் சமூக வழிகாட்டிக் குழுவின் தலைவர் ஷேக் அலாவுதீன் கூறினார்.

இந்திய முஸ்லிம்களின் சமூக மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக இரு ஆண்டுகளுக்கு முன் வழிகாட்டிக் குழு அமைக்கப்பட்டது. கடந்த ஈராண்டுகளாக அந்தக் குழு, இந்திய முஸ்லிம்களின் நலனுக்கும் பலதுறை அக்கறைக்கும் உரிய கருத்துகளை திரட்டி வந்தது. பத்து அம்சத் திட்டத்தின் அடிப்படையிலான அந்தக் கருத்துகளையும் செயல் திட்டங்களையும் குழுவின் தலைவர் ஷேக் அலாவுதீன் இஸ்லாமிய சமய மன்றத்திடம் சமர்ப்பித்தார்.

அந்தத் திட்டங்கள் முஸ்லிம் சமூகத்தின் பல்வேறு சங்கங்களுக்கும் அமைப்புகளுக்கும் தெரிவிக்கப்பட்டு முழு ஒப்புதல் பெறப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பத்து அம்சத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 26 பள்ளிவாசல்களில் தமிழ் மொழியில் இஸ்லாமிய சமயக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. ஈராண்டுகளுக்கு முன் ஒன்பது பள்ளிவாசல்களில் மட்டுமே அந்த வசதி இருந்தது. அந்த எண்ணிக்கை அதிகப்படுத்தப்படும். 'கிட்ஸ் அலைவ்' (Kids aL.I.V.E) மற்றொரு கல்வித் திட்டம். அது மென்மேலும் விரிவு படுத்தப்படும். நடப்பிலுள்ள மற்றொரு அம்சம் மார்க்க, சமயக் கல்வி ஆசிரியர்களை, வல்லுநர்களை உருவாக்கும் உதவித்திட்டம். மற்ற அம்சங்கள் இனி செயல்படுத்தப்படும் என்று ஜனாப் ஷேக் அலாவுதீன் கூறினார்.

இந்திய முஸ்லிம் சமூக வழிகாட்டிக் குழுவின் பணி தங்குதடை இன்றி சிறப்பாகத் தொடர்வதற்கு ஆய்வரங்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கியுள்ளதாக அவர் மனநிறைவு தெரிவித்தார். அதற்கு தனிப்பட்டவர்கள் மற்றும் அமைப்புகளின் அதிக உதவி கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மலாய் சமூகத்திலுள்ள வளங்களையும் ஆதரவையும் பயன்படுத்திக் கொள்வதும் குழுவின் குறிக்கோள். மெண்டாக்கி, முஸ்லிம் தொண்டூழிய அமைப்புகள் ஆகியவற்றின் மூலம் அதனைப் பெறமுடியும். மேலும், 'மாபெரும் சிங்கப்பூர் முஸ்லிம் சமூகம்' எனும் முயிஸ் இலக்கிற்கு ஏற்ப இந்திய முஸ்லிம் சமூக

வழிகாட்டிக் குழுசெயல்படும் என்று ஜனாப் ஷேக் அலாவுதீன் உறுதி தெரிவித்தார்.

### ரிஸாலா- பத்து அம்சத் திட்டம்

உன்னத சிங்கப்பூர் முஸ்லிம் சமுதாயத்தை உருவாக்கும் பத்து அம்சங்களையும் பதிவு செய்யும் சிறப்பு நிகழ்ச்சியாகவும் ஆய்வரங்கு அமைந்தது.

அவை வருமாறு:

* இஸ்லாமியக் கோட்பாடுகளை வலுவாகப் பின்பற்றும் வேளையில் சிங்கப்பூர் முஸ்லிம்கள் மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் திறனையும் பெற வேண்டும்.

* ஆன்மீக, அறநெறிக் கோட்பாடுகளை வலுப்படுத்திக் கொண்டு புதிய சவால்களைச் சமாளிக்கும் திறனைப் பெற வேண்டும்.

* நவீன சூழ்நிலைகள், காலமாற்றப் போக்குகள், பழக்க வழக்கங்களுக்கு இடையிலும் இஸ்லாமிய நெறிமுறைகளை மிக உறுதியாகப் பேண வேண்டும்.

* தற்காலப் பிரச்சினைகளை நன்கு புரிந்து கொள்வதுடன் இஸ்லாமிய நாகரிகத்தையும் சரித்திரத்தையும் மதித்துப் போற்ற வேண்டும்.

* மற்ற நாகரிகங்களை மதிப்பதுடன் மற்ற சமூகங்களின் நற்பண்புகளை அறிந்து கொள்ள வேண்டும்.

* நல்ல முஸ்லிம்கள் நாட்டின் நல்ல குடிமக்களாகவும் திகழ வேண்டும்.

* பல இன-சமய சமுதாயம், சமயச் சார்பற்ற நாடு எனும் கண்ணோட்டத்திற்கு ஏற்ப பொறுப்புணர்வுடன் முஸ்லிம்கள் பங்காற்ற வேண்டும்.

* அனைவரின் நன்மதிப்புக்கும் உரியவர்களாக நாம் திகழ்ந்து அனைத்துலகக் கொள்கை களை மேம்படுத்த வேண்டும்.

* இஸ்லாத்திற்கு முரண் இல்லாத வகையில் மற்றவர் நற்பண்புகளை மதித்து பன்முனைப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.

* மற்ற சமூகத்தினருக்கு சிறந்த எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் விளங்க வேண்டும்.

முயிஸ் சிங்கப்பூர் முஸ்லிம் சமூகத்தின் சிறப்பு அம்சங்கள் அடங்கிய புத்தகம் ஒன்றையும் வெளியிட்டிருக்கிறது. ‘ரிஸாலா’ - உன்னதத்தை நோக்கி ஒரு பயணம்- எனும் அந்த எண்பது பக்க நூல் அது. அமைச்சர் டாக்டர் யாக்கூப் இப்ராஹிம் அண்மையில் அதை வெளியிட்டார்.

## சிறப்பு தேர்ச்சி பெற்ற மாணவி - பனாசிர் பின்தி நசீர்



*2006 சிங்கப்பூர் பொதுக்கல்வித் தேர்வில் (GCE சாதாரண நிலை), சிறந்த இந்திய மாணவராக தேர்ச்சி பெற்ற பனாசிர், எட்டு பாடங்களில் A1 மதிப் பெண்ணும், ஒரு பாடத்தில் A2 மதிப்பெண்ணும் பெற்றிருந்தார்.*

தற்போது அவர் தேசிய தொடக்கக் கல்லூரியில் மேல் கல்வி பயின்று வருகிறார். சிறப்புத் தேர்ச்சி பெற்ற செல்வி பனாசிருக்கு, நாடி ஆசிரியர்க்குழு இனிய நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறது.

## அல் ஹைர் இஸ்லாமியப் பிள்ளை வளர்ப்புப் பகுதி

# இதுதான் காதலா!

புதிதாக ஒருவருக்கு மோட்டார் கார் ஒன்று பரிசாகக் கிடைக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். ஆனால் பரிசு கிடைத்தவருக்கோ வாகனம் ஓட்டவும் தெரியாது அதற்கான லைசன்சும் அவரிடம் இல்லை. இந்த நிலையில் இவர் கார் ஓட்டக் கற்றுக் கொண்டு லைசன்சை பெறும் வரை பொறுமையாக அந்தக் காரை ஓட்டாமல் இருப்பதே அறிவுடைமையாகும். ஆனால் தன் காரை ஓட்ட வேண்டும் என்ற ஆசையில் உடனே அதைப் பொதுச் சாலையில் செலுத்தினார் என்றால், இவர் சட்ட விரோதமான செயலில் ஈடுபடுவது மட்டுமல்லாமல், மற்றவரையும் தன்னையும் ஆபத்தில் ஆழ்த்தக்கூடும்.

இதேபோன்று பருவ வயது என்பது ஒவ்வொரு குழந்தைக்கும் இறைவன் கொடுக்கக் கூடிய ஒரு பரிசாகும். வயது வந்ததும் குழந்தைப் பருவத்திலிருந்து வாலிப வயதில் காலெடுத்து வைக்கையில் ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் உடலில் மட்டுமல்ல, உள்ளத்திலும் உணர்ச்சிகளிலும் கூட மாறுதல்கள் ஏற்படும். தனக்கு ஒரு துணை தேவை, அத்துணையின் மூலம் தனது வம்சம் பெருக வேண்டும் என்ற உணர்வுகள் எல்லாம் உருவாகத் தொடங்குகின்றன. முற்காலத்தில் பருவம் அடைந்தவுடனேயே திருமணம் என்ற 'லைசன்சை' பெற்றோர்கள் உடனே எடுத்துத் தந்து இந்த உணர்வுகளையெல்லாம் முறையாக தீர்த்துக்கொள்ள வகை செய்தனர்.

ஆனால் கடந்த நூற்றாண்டு முதல், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் படித்துப் பட்டதாரியாகி, நல்ல உத்தியோகத்தில் அமர்ந்த பிறகுதான் அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற செயல்பாட்டை உண்டாக்கியுள்ளனர். இதனால் சராசரி திருமண வயது கூடிக் கொண்டே போய் ஒருவர் பருவம் அடைந்து, *10* அல்லது *20* வருடங்களுக்குப் பிறகே முறையான தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபட முடிகின்றது. இருந்தாலும், திருமணத்திற்கு முன் தாம்பத்திய வாழ்வு கொள்வது தவறு என்ற கொள்கையில், திருமணம் ஆகும் வரை பேணிக்கையோடும், பொறுமையோடும் இருந்தனர் நமது மூத்த தலைமுறையினர்.

இந்த சிந்தனை மாறி திருமணத்திற்கு முன் மட்டுமல்ல, திருமணம் ஆகாமலே காதல் ஜோடிகளாகவே மட்டுமே இருந்து தாம்பத்திய உறவு வைத்துக் கொள்வதில் தவறில்லை என்ற ஆபத்தான கொள்கை தற்போது நமது இளையர்களிடையே தலைதூக்குவதை காண முடிகின்றது. இதற்கான காரணங்களை ஆராய்ந்தால் சினிமா, மீடியா, இணையம், நண்பர்கள் மற்றும் சுற்றுச் சூழல்களும் முறையான குடும்ப வாழ்க்கை முறையை விட்டு விட்டு இஸ்லாத்திற்கும், ஏன் இயற்கைக்கும் மாறான வாழ்க்கை முறையைப் போதிக்கத் தொடங்குவதால் வந்த வினை என்று தெரிய வருகிறது. இளையர்கள் முன்மாதிரிகளாகக் கருதும் திரையுலகக் கலைஞர்கள் போன்ற பிரபலமானோர் "கல்யாணத்திற்கு முன் உடலுறவு கொள்வதில் தவறில்லை" என்று பகிரங்கமாக அறிவிக்கும் காலம் இன்று வந்துள்ளது.

சரி, கலைஞர்கள் தவறான கருத்தைச் சொல்லிவிட்டுப் போகட்டும் , நம் பிள்ளைகள் செல்லும் பள்ளிக்கூடங்களாவது இக் கருத்துகளைத் திருத்துமா என்று பார்த்தால் அங்கேயும் நிலைமை குழப்பமாக உள்ளது. காரணம் தற்போது உலகில் பல பள்ளிகூடங்களில் நடத்தப்படும் செக்ஸ் எடுகேஷன் பாடத்தில், திருமணத்திற்கு முன் உடலுறவு கூடாது என்பதை போதிப்பதோடு, 'எய்ட்ஸ்' நோய் பரவலைத் தடுக்க 'சேஃப் செக்ஸ்' அதாவது "உங்களால் திருமணம் வரைக் காத்திருக்க முடியவில்லை என்றால், உடலுறவு கொள்ளுங்கள் ஆனால் பாதுகாப்பாக உடலுறவு கொள்ளுங்கள்" என்பதையும் போதிக்க ஆரம்பித்து உள்ளனர்.

இதில் மேலும் வருந்தத்தக்கது என்னவென்றால், இக்கருத்துகள் இவர்களுக்கு

மிகச் சிறிய வயதிலேயே கிடைப்பதால், இதுதான் சரி என்று, பருவம் அடைந்த உடனேயே ஜோடி சேர்ந்துகொண்டு ‘லைசன்ஸ்’ இல்லாமலேயே தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபட ஆரம்பித்து விடுகிறார்கள் என்பதுதான்.

இதை 2005ல் ‘The Straits Times’ பத்திரிகை 550 இளைஞர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில், 12 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட வயதிலேயே, 87 விழுக்காட்டினர் டேட்டிங் செய்ய ஆரம்பித்து விடுகின்றனராம். சில பிள்ளைகள் 10 வயதிலேயே ஆரம்பித்து விடுகின்றனராம். (25.12.05 தேதி பத்திரிகையைப் பார்க்கவும்). இதைப் போன்றே இந்த ஆண்டு ‘The New Paper’ பத்திரிகை 13/14 வயது நிரம்பிய 1553 மாணவர்களிடம் நடத்திய ஆய்வில் 78 விழுக்காட்டினர் திருமணத்திற்கு முன் உடலுறவு கொள்வது சரி என்ற கருத்தை ஆதரிக்கின்றனராம்! (2.3.07 தேதி பத்திரிகையைப் பார்க்கவும்) இதையெல்லாம் படிக்கக் கூடிய நம் பெற்றோர்கள், “இதெல்லாம் மற்ற சமுதாயத்தில் ஏற்படக்கூடிய பிரச்னைகள், நமது சமுதாயத்தில் இதெல்லாம் கிடையாது, அதுவும் என் பிள்ளைகள் தங்கக் கம்பிகள்!” என்று கனவு உலகத்தில் அலட்சியமாக இருக்கின்றனர். ஆனால் இதை நாம் சற்று ஆராய்ந்தால் உண்மை நிலவரத்தை உணரலாம்.

மீன் கடைக்குச் சென்று எதுவுமே வாங்காமல் ஒருவர் வந்தாலும் அவர் மீது மீன் வாடை அடிக்கத்தான் செய்யும். அப்படி இருக்கையில் மீன் கடையிலேயே வேலைப் பார்க்கும் ஒருவர் மீது மீன் வாடையே அடிக்காது என்று கூறுவது பைத்தியக்காரத் தனம் இல்லையா? அதைவிட அறிவீனம். இந்த மாறுபட்ட கொள்கை உடைய சூழ்நிலையிலேயே ஊறி வளரும் நம் குழந்தைகள் இக்கருத்துகளுக்கு அடிபணிய மாட்டார்கள் என்ற நினைப்பு. வேண்டுமென்றால் “அம்மா, அத்தா பழைய பஞ்சாங்கம். இதெல்லாம் அவர்களுக்குப் புரியாது. ஏன் வம்பு! நாம் செய்வதைச் செய்வோம்” என்று நம் முன் பெட்டிப் பாம்பாய் இருக்கலாம் நம் பிள்ளைகள். ஆனால் ஒரு நாள் காதல் பிரச்னையில் சிக்குண்டு நம் முன் வந்து நிற்கும் நேரத்தில் “மோசம் போய் விட்டோமே!” என்று நாம் கண்ணீர் வடிக்கக்கூடும்.

இந்தப் பிரச்னையை எப்படி எதிர் கொள்வது? இதை மாற்றுவதற்கு சுற்றுச் சூழல்கள் மாற வேண்டும். ஆனால் இது நம் சக்திக்கு அப்பாற்பட்டது. இதற்கு வேறோர் வழி நம் வயது வந்த பிள்ளைகளிடத்தில், இஸ்லாத்தில் திருமணம், தாம்பத்திய உறவு போன்றவற்றைப் பற்றி சரியான கொள்கை களையும், வரம்புகளுக்கு மீறிய ஆண் பெண் உறவினால் ஏற்படும் விளைவுகளைப் பற்றியும் பெற்றோர்கள் எடுத்துச் சொல்லி கல்வி புகட்டுவதாகும்.

ஆனால், இதையெல்லாம் விளக்கு வதற்குப் பல பெற்றோர்களுக்கு போதிய இஸ்லாமியக் கல்வியோ பக்குவமோ இல்லாமல் இருக்கலாம். அப்படியே இருந்தாலும் “எப்படி நம் பிள்ளைகளிடத்தில் இதையல்லாம் பற்றிப் பேசுவது” என்று கூச்சப்படுகின்றனர்.

இவர்களுக்கு உதவவே EMAK, இந்த விஷயங்களையெல்லாம் விளக்க, கடந்த வருடம் ஜூன் மாதத்தில் பதின்ம வயதுப் பெண் களுக்காகவும், டிசம்பர் மாதத்தில் பதின்ம வயது ஆண்களுக்காவும் தனித்தனியாக இரண்டு நாள் முகாம்களை நடத்தியது. உண்மையான அன்பு என்பது திருமணத்திற்கு உட்பட்டதே என்பதையும், உணர்ச்சிகளுக்கு அடிபணிந்து ஏற்படும் காதல் உறவினால் ஏற்படும் பிரச்னைகள் என்னென்ன என்பதையும் முகாமில் விளக்கப்பட்டது. இதில் கலந்துகொண்ட மாணவி ஒருவர், இறுதியில் “இவ்வளவு பிரச்னைகளைக் கொண்டு வரக்கூடிய இதுதான் காதலா! வேண்டவே வேண்டாம். கல்யாணம் ஆகும் வரை இந்தப் பிரச்னைகளில் சிக்கிக் கொள்ளாமல் நான் காத்திருப்பேன்!” என்று கூறினாராம்.

நாம், நம் பிள்ளைகளுக்கு ஆசானாக இருந்து அவர்களுக்குத் தாம்பத்திய வாழ்கை யைப் பற்றிய சரியான ஞானத்தை ஊட்டா விட்டால், அவர்களின் சுற்றுச் சூழல்களும், அவர்களின் நண்பர்களும் தவறான கொள்கைகளை ஊட்டிவிடுவார்கள். இதனால் பாதிப்படைவது நம் குழந்தைகள் மட்டுமல்ல; இந்த தவறான கொள்கைகள் வேரூன்றினால், நமது பிற்கால சமுதாயமே சீர்குலைந்து போய் விடும். அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக! ஆமீன்!

## சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் ஏற்பாட்டில்

# பட்டாதாரி இளைஞர்களுக்கு பாராட்டு விழா

சமுதாயத்தின் ஏற்ற தாழ்வுகளுக்கு பொறுப்பேற்றிருக்கும் இளையர்கள் தங்களது பொன்னான அறிவுத் திறன்களை வளரும் சமுதாயத்துக்கு அளித்திட வேண்டும். சமூக பற்றுள்ள இளவல்களை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல கற்றறிந்த பட்டதாரிகளால் தான் இயலும். கல்வி விழிப்புணர்ச்சி ஏற்படுத்துகின்ற நோக்கமே சமுதாய வெற்றிக்கு பெரிதும் உதவும் ஓர் அருமருந்து. இன்றைக்கு சமுதாய எழுச்சிப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் ஆர்வம் இளையோரிடத்தில் மிகுந்து காணப்படுகிறது.

அவ்வகையில்; நமது சமுதாயத்தின் இளைய பட்டதாரிகளை கண்டறிந்து பொதுச் சேவையில் ஈடுபடுத்தும் வகையில் அவர்களை ஆக்கப்பணிகளில் ஊக்கமளிப்பதற்காக கடந்த 01-01-2007 திங்கட்கிழமை லிட்டில் இந்தியா பனானா லீஃப் அப்பல்லோ உணவகத்தில் சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருந்தி



சங்கத்தின் சார்பில் படித்த இளைய பட்டதாரிகளுக்கான நிகழ்ச்சி ஒன்று நடந்தது. பட்டதாரிகள் மிக ஆர்வத்துடன் தத்தமது பெற்றோர்களுடன் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

---

## ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்கத்தின்

# புதிய சன்மார்க்க வகுப்புகள் ஆரம்பம்

06-1-2007 முதல் மஸ்ஜித் ஜாமியா அர்-ரபிதா பள்ளிவாசலில் (601, தியோங் பாரு ரோடு, சிங்கப்பூர் 158787), ஐக்கிய இந்திய முஸ்லிம் சங்க ஆதரவில் சன்மார்க்க வகுப்புகள் தொடங்கியுள்ளன. சனிக்கிழமைகளில் பகல் 12 மணி முதல் 3.30 மணி வரையும், ஞாயிற்றுக்கிழமைகளில் பகல் 2 மணி முதல் 3.30 மணி வரையும் வகுப்புகள் நடைபெறும்.



அனுபவமிக்க ஆசிரியர்களைக்கொண்டு பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. மேல் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:- உஸ்தாத் ஹாபிஸ் எம். அப்துல்லா ஜமாவி- 93893450, அல்லது ஜனாப் முஹம்மது ஹனீபா- 97528104.